**சுருக்கம்**

எழுது பொருள் மற்றும் அச்சுத் துறையின் விருத்தாச்சலம் அரசு கிளை அச்சகத்தில் கணினி வழி திட்டமிட்டு இயக்கப்படும் நவீன அச்சு இயந்திரம் வாங்க ரூ. 40.00 இலட்சம் நிதி வழங்குதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (எஅ2) த்துறை**

அரசாணை (நிலை) எண். 66

நாள்: 10.3.2008
திருவள்ளுவர் ஆண்டு 2039
மாசி 27

**படிக்கவும்:-**

1. அரசு ஆணை (நிலை) எண்.241, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, நாள் 28.6.2004
2. ஆணையர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை அவர்களின் நேர்முக கடித எண்.டி2/25654/2007, நாள் 28.9.2007

===========

**ஆணை:–**

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் 7.5.2007 அன்று சட்டப்பேரவையில் எழுது பொருள் மற்றும் அச்சுத் துறைக்கான மானிய கோரிக்கை எண். 30–இன் மீதான விவாதத்தில் பதில் அளிக்கும் போது, ஏனைய அறிவிப்புகளுடன் கீழ்க்காணும் அறிவிப்பை வெளியிட்டார்:–

> *“விருத்தாச்சலம் அரசு கிளை அச்சகத்தில் கணினி வழி திட்டமிட்டு இயக்கப்படும் நவீன அச்சு இயந்திரம் வாங்க ரூ. 35.00 இலட்சம் நிதி வழங்கப்படும்”*

**2.** மேலே பத்தி 1-இல் கண்டுள்ள அறிவிப்பினை தொடர்ந்து பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் விருத்தாச்சலம் அரசு கிளை அச்சகத்திற்கு நவீன அச்சு இயந்திரம் வாங்கும் செயற்குறிப்பை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் அனுப்பியுள்ளார். அதில் அச்சுத் தொழிலில் நவீன தொழில்நுட்பமாக போலி – ஜெட் பிளேட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும், கணினியில் உள்ள தகவல்கள் இந்த பிளேட்டில் மாற்றப்பட்டு அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், இந்த

த.பி.பா.,

முறையில் அச்சுப் பணி மேற்கொள்ள உபகரணங்கள் வாங்க ரூ. 40.00 இலட்சம் தேவைப்படுகிறது என்றும், இந்தத் தொகையை அனுமதிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–இல் கண்டுள்ள, செயற்குறிப்பை அரசு மிக உன்னிப்பான வியவுக்குப்பின் ஏற்பு செய்¶ விருத்தாச்சலம் அரசு கிளை அச்சகத்தில் கணினி வழி திட்டமிட்டு இயக்கப்படும் நவீன அச்சு இயந்திரம் வாங்க ரூ.40.00 இலட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) நிதி வழுங்A ஆணையிடுகிறது.

4. இச்செலவினத்தை எழுதுபொருள் அச்சுத்துறையின் அரசு அச்சக தேய்மான நிதியிலிருந்து மேற்கொள்ள ஆணையர் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை அனுமதிக்கப்படுகிறார்.

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை ஆணையர் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை அவர்கள் பின்வரும் கணக்குத் தலைப்புகளில் பற்றெழுத கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

"4058 00 எழுதுபொருள் அச்சு குறித்த மூலதனச் செலவு 103 அரசு அச்சகங்கள் மி திட்டத்தில் சேராதது கிபி அரசு அச்சகங்களை நவீனப்படுத்துதல் 19- இயந்திரமும் சாதனமும் 01- வாங்குதல் (த.தொ.கு.4058 00 103 AH 1912)"

இத்தொகை கீழ்காணும் பொதுக் கணக்குத் தலைப்புகளில் இருந்து பெற்று 4058 00 எழுதுபொருள் அச்சு குறித்த மூலதன செலவு 902 கழிக்கவும் சேமநல நிதியிலிருந்து செலவழிக்கப்பட்ட தொகை I திட்டத்தில் சாராதது "AA"கழிக்கவும் – தேய்மான/புதுப்பித்தல் காப்பு நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்ட தொகை 30 கணக்குகளுக்கிடையே மாற்றம் (துதொகு 4058 00 902 AA 3009) நேர் செய்யப்பட வேண்டும்.

"8226 00 Depreciation/Renewal Reserve Fund, 102 Depreciation Reserve Fund 07 Government Non Commercial Department "AA Government Presses" (DPC 8226 00 102 AA 000 E (Receipts)) (DPC 8226 00 102 AA 0006 (outgo))"

6. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் "புது துணைப் பணி" குறித்த துணைச் செலவினமாகக் கருதப்படும். பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். பேரவையின் ஒப்புதலை எனுர்நோக்கி முதற்கண் இச்செலவினம் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன் பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன் பணம் பெற எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் உரிய படிவத்தில் நிதி (வரவு செலவு பொது -1) துறைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**7. இவ்வரசாணை நிதித்துறையின்** இசைவினை அத்துறையின் **அ.சா.எண்.53/ JS(BK)/08,** நாள் **6.3.2008 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டு பேரேடு எண். 1981 (ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்று)-இன் மூலம் வெளியிடப்படுகிறது.**

**(ஆளுநரின் ஆணைப்படி)**

கோ.சந்தானம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
**ஆணையர்,**
**எழுதுபொருள் (ம) அச்சுத்துறை,சென்னை–2**
**சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–1/ 5**
**மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/ 35**
சார்நிலை கணக்கு அலுவலர், விருத்தாச்சலம்
**நகல்**
**நிதி**(வரவு மற்றும் செலவு மி & மிமி)**த்துறை, சென்னை–9**
**நிதி**(த.வ.(ம)செ)**த்துறை, சென்னை–9**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை-9
**இ.கோ/உதிரி**

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்